செய்தி வெளியீடு எண்: 955 நாள்: 11.07.2024

**2022-ஆம் ஆண்டில் தமிழில் சிறந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர்கள் மற்றும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு பரிசு வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள்ஆற்றிய உரை**

"புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்...

உலகத்தையே புத்தகமாய் படித்தால் அனுபவம் தழைக்கும்"

என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்து அகிலமெங்கும் உள்ள தமிழர்களுக்கு கலங்கரை விளக்காய் ஒளிர்ந்துகொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளினை வரும் ஆண்டிலிருந்து செம்மொழி நாளாக சட்டமன்றப் பேரவையில் அறிவிக்க வாய்ப்புத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிக் காலம் இலக்கியத்தின் நிலைக்களனாகவும் அமுதத்தமிழ் ஊற்றாகவும் திகழ்ந்து வருகிறது.

உலகில் வாழும் ஒரு மனிதன் செம்மாந்த வாழ்வு வாழ வேண்டுமெனில் திருக்குறள் என்னும் ஒற்றை இலக்கியத்தைப் படித்தார்களென்றால் அதுவே போதுமானது...

இனம், மொழி, மதம், சூழல் என எதுவும் தடையில்லை திருக்குறளைப் பயில்வதற்கு... திருக்குறள் வழி நடப்பதற்கு... அத்தகையதொரு ஒப்பற்ற இலக்கியத்தினை உலகில் வேறு எந்த மொழியிலும் காண இயலாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படைத்த குறளோவியத்தைப் பல முறை படிக்கின்ற வாய்ப்பு இளமையிலிருந்தே எனக்கு இயல்பாகக் கிட்டியது. ஒவ்வொரு திருக்குறளுக்கும் நடப்பியல் கதையோடு எழுதியுள்ள பாங்கே அருமையான விளக்கமாகும்.

என்னுடைய வாழ்வின் பெருமை எது என்றால் முத்தமிழறிஞர் கலைஞர் வடித்தெடுத்த வள்ளுவர் கோட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களால் புத்தாக்கம் செய்திட ஆணையிடப்பட்டு நடைபெற்றுவரும் அரும்பணியில் செய்தித் துறை அமைச்சர் என்ற வகையில் தலைமை தாங்கி ஈடுபட்டுவருவதே ஆகும்.

இலக்கியத்தைத் தனது ஆயுதமாகக் கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் வழி வந்த நம் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் இலக்கியத்தின் அருமையையும் இலக்கியவாதிகளின் பெருமையையும் உணர்ந்தவர்.

இலக்கியவாதிகளின் மகத்துவம் உணர்ந்தே நம் தமிழ்நாட்டின் வீதிகள்தோறும், ஊர்கள்தோறும், மாவட்டங்கள்தோறும் என இலக்கிய நிகழ்வுகள் இடைவிடாது நடந்தேறிட வேண்டும் என்ற முனைப்போடு ஞானபீட, சாகித்ய அகாதமி, முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழி விருது பெற்ற படைப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பெருமக்களே, கழக அரசு ஆட்சி காலத்தின் மாபெரும் சிறப்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2011ஆம் ஆண்டில் சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின்கீழ் நூலாசிரியருக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூபாய் 20,000/–லிருந்து ரூபாய் 30,000/–ஆகவும் பதிப்பாளருக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூபாய் 5,000/–லிருந்து ரூபாய் 10,000/–ஆகவும் உயர்த்தப்பட்டது. 13 ஆண்டுகள் கழித்து நடந்துமுடிந்த சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நூலாசிரியருக்கான பரிசுத் தொகை ரூபாய் 30,000/–லிருந்து ரூபாய் 50,000/–ஆகவும் பதிப்பாளருக்கான பரிசுத் தொகை ரூபாய் 10,000/–லிருந்து ரூபாய் 25,000/–ஆகவும் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு 2023ஆம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப்படும் நூல்களுக்கு நடைமுறைபடுத்தப்படும் என்பதை மீண்டும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகத்தின் அருமையை இளம் தலைமுறையினருக்கு உணர்த்துவோம்... நல்ல நல்ல நூல்களைத் தெரிவு செய்து வாசிப்போம்... படைப்பாளர்களைப் போற்றுவோம்... என்று கூறிப் பரிசு பெறும் அனைவரையும் வாழ்த்தி அமைகிறேன்... நன்றி... வணக்கம்...

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu